JMEESALAI VIGNESWARA MAHA VIDYALAYAM
MVMV-1932



# யா/மீசாலை
# விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்

## பரிசில் நாள்

**2018-08-05**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்
## *பரிசில் நாள் - 2018*

காலம் : - 03.08.2018 (வெள்ளிக்கிழமை)

நேரம் :- பி.ப 1.30

இடம் :- வித்தியாலய கலையரங்கு

**தலைவர்**

திரு.சு.சிவானந்தன் அவர்கள்

(வித்தியாலய முதல்வர்)

**முதன்மை விருந்தினர்**

திரு.நடராசலிங்கம் ஜெகதீசன் அவர்கள்

(தலைவர், பழையமாணவர் ஆசிரியர் சங்கம் -பிரான்ஸ்)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு. அருணாசலம் பாலமயூரன் அவர்கள்

(உபதவிசாளர் - நகராட்சிமன்றம் சாவகச்சேரி, உபசெயலாளர் - பழைய மாணவர் சங்கம்)

திருமதி. செல்வராணி ஜெகதீசன் அவர்கள்

(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் - தென்மராட்சி)

**கௌரவ விருந்தினர்கள்**

திரு.தம்பிராசா பரமானந்தம் அவர்கள்

(போசகர், பழையமாணவர் ஆசிரியர் சங்கம் - பிரான்ஸ்)

திரு.நடராசலிங்கம் ஜெயபரன் அவர்கள்

(பழையமாணவர் - கனடா)

திரு.கோவிந்தசாமி சுதந்திரநாதன் அவர்கள்

(பழையமாணவர்- பிரான்ஸ்)

திருமதி. கலாரஞ்சினி குணசீலன் அவர்கள்

(பிரான்ஸ்)

திருமதி. பவானி குணபாலன் அவர்கள்

(பிரான்ஸ்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**- பாடசாலைச் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- ❖ விருந்தினர்களை வரவேற்றல்
- ❖ கொடியேற்றல்
- ❖ மங்கல விளக்கேற்றல்
- ❖ இறைவணக்கம்
- ❖ வரவேற்பு நடனம்
- ❖ வரவேற்புரை
- ❖ அதிபர் அறிக்கை
- ❖ பரிசில் வழங்கல்
- ❖ சிறப்பு விருந்தினர் உரை
- ❖ முதன்மை விருந்தினர் உரை
- ❖ கலை நிகழ்வுகள்
- ❖ நன்றியுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

எமது அழைப்பை ஏற்று இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் திரு நடராசலிங்கம் ஜெகதீசன் அவர்களே, சிறப்பு விருந்தினர்கள் திரு அருணாசலம் பாலமயூரன், திருமதி செல்வராணி ஜெகதீசன் அவர்களே, கௌரவ விருந்தினர்கள் திரு தம்பிராசா பரமானந்தம், திரு நடராசலிங்கம் ஜெயபரன், திரு கோவிந்தசாமி சுதந்திரநாதன், திருமதி கலாரஞ்சினி குணசீலன், திருமதி பவானி குணபாலன் அவர்களே பிரதிக்கல்விப்பணிப்பாளர்களே, உதவிக்கல்விப்பணிப்பாளர்களே, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, , எம்பள்ளி மழலைகளே அனைவருக்கும் வணக்கம் கூறி அகமகிழ்ந்து உவகையுடன் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு நடராசலிங்கம் ஜெகதீசன் அவர்கள் எமது பாடசாலையின் ஸ்தாபகத்தலைவர்களில் ஒருவராகிய அமரர் கார்த்திகேசுவின் பேரனாவார். தற்போதைய கார்த்திகேசு கலையரங்கத்தினை புனருத்தாரணம் செய்து தந்தவர். பாடசாலையின் பழைய மாணவனும் தற்போது பிரான்சில் வசிக்கும் இவர் பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பிரதான கிளையாகிய பிரான்ஸ் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்து செயற்றிறனுடன் செயற்பட்டு வருகின்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவனும் பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின் வினைத்திறன் மிக்க உறுப்பினராக இருந்து மிக நீண்ட காலமாக பணியாற்றி வரும் இவர் எமது பழைய மாணவர் சங்கத்தின் உபசெயலாளராக இருப்பதுடன் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் உபதவிசாளராக இருந்து அரசியல் சமூகப்பணியினை ஆற்றி வருகின்றார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் திருமதி செல்வராணி ஜெகதீசன் அவர்கள் இப்பாடசாலையின் பழைய மாணவியாவார். இவர் 1986 ஆம் ஆண்டு இப்பாடசாலையிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்குத் தெரிவாகி பாடசாலைக்குப் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்ததுடன் கலைத்துறைப் பட்டத்தையும் பெற்று தென்மராட்சிப் பிரதேசத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்றார்.

கௌரவ விருந்தினர் திரு தம்பிராசா பரமானந்தம் அவர்கள் எமது பிரான்ஸ் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் போசகராவர். இவர் இச்சங்கத்தை உருவாக்கி முக்கிய தூணாக இருந்து செயற்பட்டு வருவதுடன் இப்பழைய மாணவர் சங்கத்தை மிகவும் கட்டுக் கோப்பாக செற்படுத்துவதில் முக்கிய இடம் வகித்து வருவதுடன் தென்மராட்சிப் பிரதேச பாடசாலையின் முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயற்பட்டு பல நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்குவதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்.

திரு நடராஜலிங்கம் ஜெயபரன் அவர்கள் இப்பாடசாலையின் பழைய மாணவர் ஆவார். இவர் தற்போது கனடாவில் வசித்து வருவதுடன் எமது பாடசாலை வளர்ச்சிக்காக பல உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கிவருவதுடன் எமது பாடசாலையின் ஸ்தாபகத்தலைவர்களில் ஒருவராகிய அமரர் கார்த்திகேசுவின் பேரனுமாவார்.

திரு கோவிந்தசாமி சுதந்திரநாதன் அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவர் ஆவார். தற்போது பிரான்சில் வசித்து வரும் இவர் எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டு வரும் ஒருவராக இருந்து வருகின்றார். திருமதி கலாரஞ்சினி குணசீலன் அவர்களின் கணவர் திரு க.குணசீலன் எமது பாடசாலையின் பழைய மாணவராக இருந்து விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக உதவி செய்பவராக இருப்பதுடன் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுடைய குடும்பமாக செயற்பட்டு வருகின்றார். திருமதி பவானி குணபாலன் அவர்களின் கணவர் எமது பாடசாலையின் பழைய மாணவர் ஆவார். பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் முக்கிய பங்காளியாக இருந்து பாடசாலை வளர்ச்சிக்காக ஓயாது உழைத்து வருகின்றார்.

மீண்டும் எம் நிகழ்வை சிறப்பிக்க வருகை தந்திருக்கும் அனைத்து நல்லுள்ளங்களையும் வரவேற்று உளம் மகிழ்ந்து 2018 ஆம் ஆண்டுக்கான பரிசில்நாள் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் ஆளணி விபரம்

| | |
|---|---|
| பட்டதாரிகள் | 16 |
| பயிற்றப்பட்டோர் | 7 |
| கற்பித்தலில் தேசிய டிப்ளோமா | 1 |
| மொத்தம் | 24 |

## மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 - 5 | 24 | 15 | 39 |
| 6 - 11 | 32 | 22 | 54 |
| 12 - 13 | 10 | 06 | 16 |
| மொத்தம் | 66 | 43 | 109 |

## தரம் 5 புலமைப்பரிசில் - 2017

| | |
|---|---|
| தோற்றியோர் | 10 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 4 |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 4 |

## க.பொ.த சாதாரணதரப் பரீட்சை - 2017

| | |
|---|---|
| தோற்றியோர் | 11 |
| சித்திபெற்றோர் | 2 |
| சித்தி வீதம் | 18.1% |

## க.பொ.த உயர்தரப்பரீட்சை - 2017

| | |
|---|---|
| தோற்றியோர் | 4 |
| சித்திபெற்றோர் | 4 |
| சித்தி வீதம் | 100% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது முகாமைத்துவம்

உலகில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் இணைந்து வாழும் போது மாறுபட்ட குணங்களிடையே முரண்பாடுகள் மேலெழுச்சி கொள்வது இயல்பானது. இவற்றை ஒருங்கிணைத்து ஒரு திட்டத்தை இலக்கு நோக்கி நகர்த்தும் உத்தி முகாமைத்துவம் எனப்படுகின்றது.

பாடசாலையிலும் கலைத்திட்டம் பௌதீகவளம், இணைக் கலைத்திட்டம், சமூக நோக்கு போன்றவற்றை முகாமை செய்ய பொது முகாமை அவசியம் மாணவர்களிடம் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர நேர்மனப்பாங்குடன் செயலாற்றும் போது முகாமைக்குழு எனக்கு பக்க பலமாக இருப்பதுடன் பாடசாலையின் வளர்ச்சிக்கும் உதவுவதையிட்டு மனமகிழ்வடைகின்றேன்.

பலமும் பலவீனமும் நிறைந்த வாழ்வில் அனைத்தையும் சமப்படுத்தி சவால்களுக்கு முகங்கொடுத்து மாணவர்களிடத்து புதைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர அரும்பாடு படவேண்டியுள்ளது. இதற்கு முகாமைத்துவத்துடன் இணைந்து நிற்கும் அனைவரைக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

## பௌதீக மனிதவள முகாமைத்துவம்

பௌதீகவளம் நிலையான பௌதீகவளம், அசையும் பௌதீகவளம் என இருபிரிவுகளைக் கொண்டது. பாடசாலையும் இதனை உள்ளடக்கியதே. பாடசாலையின் அசையும் பௌதீக வளத்தினுள் மனித வளங்கள் உள்ளடங்கும். ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் பாடசாலையின் மனித வளத்தினுள் அடங்குவர்.

ஆசிரியர்வள முகாமைத்துவத்தின் அத்திவாரம் ஆரம்பப்பிரிவேயாகும். எமது ஆரம்பப்பிரிவில் 40 மாணவர்கள் தற்போது கல்வி கற்கின்றனர். இவ்வருடம் தரம் 1 இல் 12 மாணவர்கள் இணைந்து கல்வி கற்று வருகின்றனர். இனிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் ஆரம்பப்பிரிவில் சேரும் மாணவர்களின் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எமது பாடசாலையின் கற்றல்வள நிலையம் ஒழுங்கமைக்கப்பட்டு தற்போது அதிக மாணவர்கள் பயன்படுத்தும் கற்றல் களமாக உள்ளது. 1C வகைப் பாடசாலையான எம் பாடசாலை கற்றல்வள நிலையப் போட்டிகளில் பங்குபற்றி வருவதுடன் கடந்த மூன்று வருடங்களாக மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை சிறப்பம்சமாகும்.

எமது பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடமானது வினைத்திறனுடைய களமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை சிறப்பான விடயமே. இதன் காரணமாக மாணவர்களின் விஞ்ஞானப் பெறுபேறுகள் உயர்மட்டத்தை அடைந்து வருகின்றது. ஏனைய வருடங்களை விட கடந்த வருட விஞ்ஞான பாட சித்திவீதம் அதிகரித்தமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

அடுத்து எமது பாடசாலையின் கணினி அறையானது மாணவர்களினால் வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தரம் 1, தரம் 13 வரையான மாணவர்களின் கற்றலில் நவீன கற்பித்தல் சாதனப்பயன்பாடு அதிகரித்துள்ளது. அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் தொடர்பான வலயமட்டப் போட்டிகளில் வருடா வருடம் மாணவர்கள் பங்குபற்றி பரிசில்களும் பெற்று வருகின்றனர்.

மேலும் எமது பாடசாலையில் இவ்வருடம் மாணவர்களின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்ய நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டு சகல மாணவர்களும் சிரமம் இல்லாது நீரைப் பெற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எமது பாடசாலையின் பௌதீக வளத்தை உத்தமமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்கிணங்க பாடசாலை கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு தீந்தை பூசி அழகுபடுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு பௌதீக மனிதவளமுகாமை சிறப்பாக இயங்க பாடசாலை ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் உதவி புரிகின்றமை பாராட்டப்பட வேண்டியதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை உயர்மட்டக் கல்விச் செயற்பாடுகள்

பாடசாலையின் ஆசிரியர் மாணவர்களிடம் மறைந்துள்ள திறன்களை வெளிக்கொணர வகுக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றே பாடசாலை உயர்மட்டக் கல்விச் செயற்பாடு ஆகும்.

பாடசாலை ஆசிரியர் மாணவர்களிடையே இடம்பெறும் கற்றல் செயற்பாட்டை வலுவூட்டும் வகையில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் வேலைத்திட்டங்கள் உள்ளன. இவ்வகையில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) உள்ளது. அதே போல பாடசாலை மேம்பாட்டுத்திட்டமும் உள்ளது. இவையிரண்டும் பாடசாலைக்கு என ஒதுக்கப்பட்ட நிதியினூடாக பாடசாலையினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வகையில் சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்காக வளவாளர்கள் அழைக்கப்பட்டு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. ஆசிரியர்களின் உளநலவாண்மை விருத்தியின் பொருட்டு "வகுப்பறையில் நேர் முகாமைத்துவம்" என்னும் தொனிப்பொருளில் முப்பது மணித்தியாலங்கள் ஆசிரியர்களின் பங்கேற்புடன் கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பிரச்சினைகளை இலகுவாக இனங்கண்டு அவற்றை தீர்க்க குறித்த பாடரீதியான ஆசிரியர்களின் பங்கேற்புடன் தரவட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான எமது செயற்பாடு பாடசாலை மட்டத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் பெரும்பங்காற்றியுள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய ஆளணியினர்

| No | Name | Edu/PROFETIONAL QUA. | Grade |
|---|---|---|---|
| 1 | MR. S.SIVANANTHAN | B.B.A(Hons), PGDE, MEd | SLPS |
| 2 | MR.S.KODESWARAN | B.A(Hons), PGDE, MA (De.Stu), MEd | SLTS 1 |
| 3 | MR.K.SUTHESKARAN | B.A, PGDE, MEd, | SLTS 1 |
| 4 | MR.T.KUMARANATHAN | B.F.A(Art), PGDE | SLTS 2 -11 |
| 5 | MRS.T.JEYARAJAH | B.F.A(Muscic) | SLTS 1 |
| 6 | MRS.K.SANTHIRANATHAN | Primary Trd | SLTS 1 |
| 7 | MRS.R.RAVIKUMAR | B.A, PGDE | SLTS 1 |
| 8 | MRS.G.KALNITHY | Primary Trd | SLTS 1 |
| 9 | MRS.P.SANMUGAM | B.A, PGDE, M.A (Tamil) | SLTS 2-1 |
| 10 | MRS.S.MAHENTHIRAKUMAR | Dip in teach (Maths) B.A, PGDE | SLTS 2-1 |
| 11 | MRS.S.SASIKUMAR | B.A(Hons), PGDE | SLTS 2-11 |
| 12 | MRS.A.KARUNAKARAN | B.A, PGDE | SLTS 2-1 |
| 13 | MRS.S.KONESWARAN | B.A, PGDE | SLTS 2-1 |
| 14 | MRS.P.NAGULESWARAN | Primary Trd. | SLTS 2-1 |
| 15 | MRS.R.SRITHARAN | Primary Trd | SLTS 3-II |
| 16 | MRS.P.NAGASEELAN | Tamil Trd | SLTS 3-1 |
| 17 | MRS.S.SUTHARSAN | B.Com, PGDE | SLTS 2-1 |
| 18 | MRS.V.JEYAKANTHAN | B.A, Science Trd | SLTS 2-1 |
| 19 | MISS.V.VATHANI | B.F.A | SLTS 2-11 |
| 20 | MRS.K.JEYASRI | B.A, PGDE | SLTS 2-11 |
| 21 | MRS.V.ARULEESAN | B.A, PGDE | SLTS 2-11 |
| 22 | MISS.S.VINASITHTHAMBI | English Trd | SLTS 2-11 |
| 23 | MRS.S.ATPUTHARAJAH | Advance level Dip. Physical Edu. | SLTS 3-1 |
| 24 | MRS.S.KISHORKKUMAR | National Dip in teach (ICT) | SLTS 2-11 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமாற்றம் பெற்று வந்தோர்

- திரு து.குமரநாதன்
- செல்வி வி.வதனி
- திருமதி ந.சிறீதரன்

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

- திருமதி றெ.கலையரசன்
- திருமதி க.ஜெயகுமாரன்
- திருமதி ஐ.சிவநாதன்
- திருமதி நா.நந்தகுமாரன்

## கிறிஸ்தவபாடம் கற்பிக்கும் ஆசிரியர்

- திருமதி கனகாங்கி இராஜசுதாகர்

## கல்விசாரா ஊழியர் விபரம்

- செல்வி வை.கோமதி – சுகாதாரத் தொழிலாளி
- திரு க.ஆறுமுகம் - காவலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்

கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு சமாந்தரமாக மாணவர்களின் ஆற்றல்களையும் ஆளுமைத்திறன்களையும் வளர்ப்பதில் இணைபாடவிதானச் செயற்பாடுகள் முக்கியம் பெறுகின்றன. அந்த வகையில் மெய்வன்மைப் போட்டிகள், உள்ளக விளையாட்டுப் போட்டிகள், குறிப்பாக சதுரங்கம், கரம் போன்றவற்றில் சாதனைபடைத்து வருகின்றார்கள். சமூக விஞ்ஞானம், கணித விஞ்ஞானம், நூலகம் சார் போட்டிகள், வணிக வினாவிடைப் போட்டிகள், புதுவருடக் கொண்டாட்டச் சிறப்புப் போட்டிகள், தகவல் தொடர்பாடல் செய்முறைப் போட்டிகள், ஆங்கில தினம், தமிழ்த்தினம், இந்து மாமன்றச் செயற்பாடுகள் போன்றவை மாணவர்களிடையே வளர்க்கப்பட்டடு பாடவிதானத் திறன்கள் மூலம் மாணவர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தி பல்வேறு மட்டங்களில் வெற்றியும் தேர்ச்சியும் பெறுகின்றனர்.

இவ்வாண்டு மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் வகையில் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இம் மாணவர்களின் பயிற்சிகள் சவால்களுக்கும் ஏற்ப கோட்ட, வலய மட்டங்களில் பங்கேற்கும் மாணவர்களையும் வழிகாட்டிய ஆசிரியர்களையும் இந்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரை பொறித்த தனித்துவங்கள்

❖ செல்வி ச.சரண்யா :- குண்டு எறிதல் - வலய மட்டம் இரண்டாம் இடம் - மாகாண மட்டத்தில் பங்குபற்றியமை

❖ செல்வி சு.தமிழினி, செல்வி தெ.அபிசா, செல்வி மு.கேதுசா, செல்வி ச.அஜந்தினி, செல்வி ஜெ.ஜாதவி, செல்வி ப.கிசானி :- கரம் வலய மட்டம் இரண்டாம் இடம் - மாகாண மட்டத்தில் பங்குபற்றியமை

❖ சதுரங்கம் :- வலய மட்டம் மூன்றாம் இடம் செல்வன் இ.அனிற்றன், நான்காம் இடம் செல்வன் மு.கிரிசாந், ஐந்தாம் இடம் செல்வன் ர.கனுசியன்

❖ சிந்துநடைக்கூத்து :- வலய மட்டம் இரண்டாம் இடம் (செல்வி வி.நிவேதா, செல்வி சி.ஜிந்துஜா, செல்வி ச.துசிதா, செல்வன் ர.பாவலன், செல்வன் கா.விதுர்சன், செல்வன் ச.சேயோன், செல்வி சு.தமிழினி, செல்வி ஜெ.ஜாதவி, செல்வன் அ.சாம்சன் கொறேரா, செல்வன் கோ.அஜந்தன், செல்வி மு.கேதுசா, செல்வன் சு.பிரதீப், செல்வன் ர.கனுசியன்)

❖ செல்வன் சு.பிரதீப் :- கவிதைப்பாடல் - பிரதேச செயலக தேசிய கலை இலக்கியப் போட்டி முதலாம் இடம்

❖ செல்வி ஜெ.ஜாதவி :- கவிதைப்பாடல் - பிரதேச செயலக தேசிய கலை இலக்கியப் போட்டி இரண்டாம் இடம்

❖ செல்வன் இ.ஜோயல் அனோஜ் :- சமூக விஞ்ஞானப் போட்டி – வலயமட்டம் முதலாம் இடம்

❖ செல்வன் ஞா.குகன் :- சமூக விஞ்ஞானப் போட்டி - வலயமட்டம் இரண்டாம் இடம்

❖ செல்வன் சு.சந்தோஸ் :- வலய மட்ட சித்திரைப்புத்தாண்டு போட்டி - தேர்ச்சி

❖ செல்வன் ஞா.குகன் :- கோலப்போட்டி-வலயமட்டம் - தேர்ச்சி

❖ செல்வன் கா.விதுர்சன் :- தோரணம் பின்னல் வலயமட்டம் தேர்ச்சி

❖ செல்வன் ர.கனுசியன் :- சதுரங்கம் மாவட்ட மட்டம் தேர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றச் செயற்பாடுகள்

## இந்துமாமன்றம்

எமது மாணவர்களின் சமயபழக்க வழக்கங்களையும் சமய விழுமியங்களையும் பேணி வளர்க்கும் நோக்கில் இம்மன்றம் சிறப்பாக செயற்படுகின்றது. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் சமய நற்சிந்தனை வழங்கப்படுவதோடு சமய விழாக்களும கொண்டாடப்படுகின்றது. அத்துடன் நவராத்திரி விழா காலத்தில் மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுகின்றன. எமது பாடசாலை மாணவர்கள் சமய அறிவுப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ மன்றம்

எமது பாடசாலையில் கிறிஸ்தவ மன்றத்தின் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. காலை ஆராதனையின் போது தினமும் கிறிஸ்தவப் பாடல்கள் இசைக்கப்படுகின்றது. வருடம் தோறும் மூன்றாம் தவணையின் இறுதிப்பகுதியில் ஒளிவிழாவும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

## தமிழ்மன்றம்

இம்மன்றமானது தமிழ்மொழித்திறனை வளர்ப்பதில் பெரும்பங்காற்றி வருகின்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இம்மன்றத்தின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. பாடசாலை மட்டத்தில் தமிழ்மொழித்திறன் போட்டிகள் நடாத்தப்பட்டு திறமையான மாணவர்கள் வலய மட்டப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். மேலும் மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருமுகமாக இவ்வருடம் இரண்டாம் தவணையில் "பாரிஜாதம்" என்னும் கையெழுத்துச் சஞ்சிகை இம்மன்றத்தினால் வெளியிடப்பட்டமை சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலமன்றம்

இப்பாடசாலையின் ஆங்கில மன்றமானது மாணவர்களின் ஆங்கில மொழித்திறனை வளர்ப்பதில் பெரும்பங்காற்றி வருகின்றது. வாரத்தில் ஒரு நாள் காலைப்பிரார்த்தனையின் போது இம்மன்றத்தின் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. பாடசாலை மட்டத்தில் ஆங்கில தினப் போட்டிகள் நடாத்தப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப் போட்டிகளில் பங்கேற்கச் செய்யப்படுகின்றனர்.

## சமூக விஞ்ஞான மன்றம்

சமூக விஞ்ஞான மன்றம் இப்பாடசாலையில் சிறப்பாக இயங்கி வருகின்றது. காலைப்பிராத்தனையில் வாரத்தில் ஒரு நாள் இம்மன்றத்தின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டிக்கு மாணவர்கள் தயார்ப்படுத்தப்பட்டு வருடா வருடம் வெற்றி பெறுகின்றமை சிறப்பம்சமாகும்.

## கணித விஞ்ஞான மன்றம்

கணித விஞ்ஞான மன்றமும் இப்பாடசாலையில் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. காலைப்பிரார்த்னையில் வாரத்தில் ஒரு நாள் இம்மன்றச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. வலய மட்ட கணித, விஞ்ஞான பாடம் தொடர்பான போட்டிகளில் மாணவர்களை தயார்ப்படுத்தி மாணவர்களை வெற்றி பெறச் செய்வதில் இம்மன்றம் பெரும்பங்காற்றியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையும் சமூக உறவும்

கல்வி அபிவிருத்தி மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காகவும் இப்பாடசாலை கடந்த தசாப்தங்களிலே சுடர் விட்டு ஒளிர்ந்தது போல் மீண்டும் துளிர்க்க வேண்டும் என்ற அவாவினாலும் இச் சமூக உறவுகள் பாடசாலையுடன் கொண்டிருக்கும் நெருக்கமானது அறவிட்டுக் கூறமுடியாத ஒன்று. அதிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் தூர தேசத்தில் நின்றாலும் அமது பிரதேசப் பாடசாலையின் வளர்ச்சியைத் தமது சிந்தனையின் கண்ணாகக் கொண்ட புலம் பெயர் நாடுகளில் வசிக்கும் சமூக உறவுகளினதும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களினதும் அன்னியோன்னியமானது அளப்பரிய ஒன்று. இதை நாம் கடந்த ஆண்டுகளிலே மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இவர்களால் மனமுவந்து அன்பளிப்புச் செய்யப்பட்ட துவிச்சக்கரவண்டிகள், பாடசாலைப் புத்தகப்பைகள், காலணிகள், விளையாட்டு உபகரணங்கள், கடந்த ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கான நிதியுதவி மற்றும் பாடசாலையின் கட்டடப் புத்தாக்கத் திட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்களின் மூலம் தெளிவுபடுத்த முடியும். இவ்வாறு பலதரப்பட்ட உதவிகளையும் பெற்ற மாணவர் சமூகம் அவர்களின் அவாவினை செவ்வனே நிறைவு செய்ய வேண்டும் என்பது இப்பாடசாலையின் எதிர்பார்ப்பாகும்.

"எய்தற்கு அரியது இயைத்தக்கால் அந்நிலையே

செய்தற்கு அரிய செயல்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க இச் சமூகம் பாடசாலையுடன் கொண்டிருக்கும் அன்பு உறவினை எமது பாடசாலைச் சமூகம் இந்நன்நாளில் பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்வை அடைவதோடு இப்பணி மேலும் தொடர்ந்து நீடிக்க வாழ்த்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை, சமூக இடைவினையுறவின் பலனாக பாடசாலைக்குக் கிடைத்த அன்பளிப்புக்கள்

- குளோபல் நெற்வேக் நிறுவனத்தால் அனைத்து மாணவர்களுக்கும் காலணி வழங்கப்பட்டமை.
- மாகாணசபை உறுப்பினர் கே.சஜந்தனால் புத்தக அலுமாரிகளும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டமை.
- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி சமூக மன்ற மாணவிகளால் 150 புத்தகங்கள் கற்றல்வள நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டமை.
- பழைய மாணவி திருமதி கருணாநிதி சிவராசா (கனடா) அவர்களால் ரூபா 61500 பெறுமதியான பல்லூடக எறியி (மல்ரி மீடியா) அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## எதிர்நோக்கப்படும் சவால்கள் மற்றும் தேவைகள்

- 9 வகுப்பறைகளை மூடிய வகுப்பறைகளாக மாற்றல்
- வடக்க,கிழக்கு எல்லைகளுக்கு மதில் அமைத்தல்
- நுழைவாயிலினை நவீனமாக மாற்றியமைத்தல்
- ஒலியமைப்புத் தொகுதியை நவீனமாக்கல்
- மின்சாரக் கட்டமைப்பினை செப்பனிடுதலும், நிறுவுதலும்
- நவீன கற்பித்தல் வகுப்பறைகள் அமைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறும் மாணவர் விபரம்

## தரம் - 1

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | க.கீர்த்தன் | பொதுத்தேர்ச்சி |
| 2 | ர.விதுசியா | பொதுத்தேர்ச்சி, வரவொழுங்கு |
| 3 | இ.ஜெனிஷா | பொதுத்தேர்ச்சி |
| 4 | அ.ஆரணி | பொதுத்தேர்ச்சி |
| 5 | த.கிருஷனா | பொதுத்தேர்ச்சி |
| 6 | பி.நிசாஜினி | பொதுத்தேர்ச்சி |
| 7 | ரி.அபிஷா | பொதுத்தேர்ச்சி |
| 8 | செ.அபிசாளினி | பொதுத்தேர்ச்சி |
| 9 | வி.விஷ்வாதிகள் | பொதுத்தேர்ச்சி |
| 10 | கு.சன்சயன் | பொதுத்தேர்ச்சி |
| 11 | பி.நிஷாளினி | பொதுத்தேர்ச்சி |
| 12 | க.சேனுஜன் | பொதுத்தேர்ச்சி |

## தரம் - 2

| இல | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1 | அ.சாருஜன் | பொதுத்தேர்ச்சி |
| 2 | செ.சானுஜசர்மா | பொதுத்தேர்ச்சி |
| 3 | ர.தனுஜன் | பொதுத்தேர்ச்சி, வரவொழுங்கு |
| 4 | த.கம்சிகா | பொதுத்தேர்ச்சி |
| 5 | க.நிசாளினி | பொதுத்தேர்ச்சி |
| 6 | க.ஜாற்ஷன் | பொதுத்தேர்ச்சி |
| 7 | சி.சிறீராம் | பொதுத்தேர்ச்சி |
| 8 | இ.விதுஷா | பொதுத்தேர்ச்சி |
| 9 | ஜெ.அஸ்வின் | பொதுத்தேர்ச்சி |
| 10 | ர.கனுஷியன் | பொதுத்தேர்ச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 3

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வி சு.தமிழினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி, வரவொழுங்கு |
| 2 | செல்வி ரா.ஜென்சிகா | கணிதம், சுற்றாடல் |
| 3 | செல்வன் த.ஆஸ்கான் | தமிழ், கணிதம், சுற்றாடல், கிறிஸ்தவம், பொதுத்தேர்ச்சி |

தரம் - 4

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வன் செ.சிந்துஜசர்மா | தமிழ், கணிதம், சமயம், ஆங்கிலம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 2 | செல்வி க.கனிதா | தமிழ், ஆங்கிலம, சுற்றாடல், பொதுத்தேர்ச்சி, வரவொழுங்கு |
| 3 | செல்வன் இ.மிஷேல் | சமயம் |
| 4 | செல்வன் மு.அபிதரன் | ஆங்கிலம் |

தரம் - 5

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வன் சு.சந்தோஸ் | சமயம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 2 | செல்வி இ.வர்ஷா | தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 3 | செல்வன் சு.வான்நிலவன் | தமிழ், சமயம் |
| 5 | செல்வன் சு.கோகுலன் | வரவொழுங்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 6

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வன்.கா.நிதர்சனன் | தமிழ், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 2 | செல்வன் ச.அசோக் | சமயம், வரவொழுங்கு |
| 3 | செல்வன் க.தகவினியன் | தமிழ், சுற்றாடல் |
| 4 | செல்வி க.கிஷானி | தமிழ், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் |

தரம் - 7

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வன்.ர.பிரதீஸ் | தமிழ், கணிதம், ஆங்கிலம், புவியியல், குடியியல், வரலாறு, சங்கீதம், செ.மு.தொ |
| 2 | செல்வன் து.துவாரகன் | சங்கீதம் |
| 3 | செல்வன்.மு.கிரிஷாந் | கணிதம், புவியியல், வரலாறு, சங்கீதம், விஞ்ஞானம், செ.மு.தொ |
| 4 | செல்வன்.மை.தமிழ்ப்பிரியன் | கிறிஸ்தவம், புவியியல், குடியியல், வரலாறு, சங்கீதம், விஞ்ஞானம், செ.மு.தொ |
| 5 | செல்வி.த.டக்சலா | தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், புவியியல், குடியியல், சுகாதாரம்,வரலாறு, நடனம், விஞ்ஞானம்,செ.மு.தொ |
| 6 | செல்வி சு.சந்தியா | தமிழ், கணிதம், சமயம், ஆங்கிலம், புவியியல், குடியியல், சுகாதாரம், வரலாறு,சங்கீதம், விஞ்ஞானம், செ.மு.தொ, வரவொழுங்கு |
| 7 | செல்வன்.ஜெ.கிசோத் | சங்கீதம், செ.மு.தொ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 8

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வன்.அ.அகஸ்ரீன் | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சுகாதாரம், செ.மு.தொ.நு, சங்கீதம் |
| 2 | செல்வி.இ.ஜஷீனா | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞர்னம், வரலாறு, புவியியல், குடியியல், சுகாதாரம், செ.மு.தொ.நு, சங்கீதம், வரவொழுங்கு |
| 3 | செல்வி.மு.கிருஷாந்தி | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், குடியியல், சுகாதாரம், செ.மு.தொ.நு, சங்கீதம் |
| 4 | செல்வி.சி.அஜிந்தா | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், குடியியல், செ.மு.தொ.நு, சங்கீதம் |
| 5 | செல்வன்.ர.கனுசியன் | கணிதம், குடியியல், செ.மு.தொ.நு, சங்கீதம் |
| 6 | செல்வி.ச.சஜனி | சமயம், தமிழ், வரலாறு, குடியியல், செ.மு.தொ.நு, சங்கீதம் |
| 7 | செல்வன்.சு.பிரதீப் | சங்கீதம் |
| 8 | செல்வி.கி.தரணிகா | தமிழ், குடியியல், செ.மு.தொ.நு, சங்கீதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 9

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வன்.லோ.லோஜிதன் | சங்கீதம், செ.மு.தொ.நுட், வரவொழுங்கு |
| 2 | செல்வன்.அ.சாம்சன்கொரேரா | சங்கீதம், கிறிஸ்தவம், தமிழ், வரலாறு, குடியியல், செ.மு.தொ.நுட் |
| 3 | செல்வன்.கோ.அஜந்தன் | சங்கீதம், விஞ்ஞானம், புவியியல் |
| 4 | செல்வி.மு.கேதுசா | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சுகாதாரம், செ.மு.தொ.நுட், சங்கீதம் |
| 5 | செல்வி.வ.வானவி | செ.மு.தொ.நு, சமயம், வரலாறு, குடியியல் |

## தரம் - 10

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வன்.சு.றொபேட் வின்சன் | கிறிஸ்தவம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சுகாதாரம், செ.மு.தொ, சங்கீதம், வரவொழுங்கு |
| 2 | செல்வன்.இ.அனிற்றன் | கிறிஸ்தவம், தமிழ், ஆங்கிலம், புவியியல், சுகாதாரம், செ.மு.தொ, சங்கீதம் |
| 3 | செல்வி. ப.கிஷானி | சங்கீதம் |
| 4 | செல்வன்.ர.கிருசன் | சமயம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, சுகாதாரம், செ.மு.தொ,சங்கீதம் |
| 5 | செல்வி.தெ.அபிசா | தமிழ், ஆங்கிலம், சங்கீதம் |
| 6 | செல்வி.ஜெ.யாதவி | சங்கீதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 11

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1 | செல்வன்.கா.விதுர்சன் | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம், சங்கீதம், ICT |
| 2 | செல்வன்.ர.பாவலன் | கிறிஸ்தவம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம், சங்கீதம், ICT |
| 3 | செல்வி.சு.தமிழினி | புவியியல், ஆங்கிலம் |
| 4 | செல்வி.க.காயத்திரி | சமயம் |
| 5 | செல்வன்.ச.ஜெகதீஸ்வரன் | வரவொழுங்கு |

## தரம் - 12

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1. | செல்வன் ச.அஜய் | பொதுத்தேர்ச்சி |
| 2. | செல்வி வி.நிவேதா | பொதுத்தேர்ச்சி |

## தரம் - 13

| இல | மாணவர் பெயர் | தேர்ச்சி |
|---|---|---|
| 1. | செல்வன்.இ.ஜோயல் அனோஜ் | தமிழ், புவியியல், வரலாறு |
| 2. | செல்வன்.ஞா.குகன் | இந்து நாகரிகம், புவியியல், வரலாறு |

# விசேட பரிசு பெறுவோர்

## க.பொ.த (சா/த) – 2017

**செல்வி பாஸ்கரன் கனிஸ்ரியா - 4A,2B,3C**

**செல்வன் விக்கினேஸ்வரன் அனோஜன் - 4A,1B,3C,1S**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் முதலாவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விபரம்

### தரம் 1
1. க.கீர்த்தன்
2. ர.விதுசியா
3. இ.ஜெனிஷா

### தரம் 2
1. அ.சாருஷன்
2. செ.சானுஜசர்மா
3. ர.தனுஜன்

### தரம் 3
1. சு.தமிழினி
2. ச.தனுஸ்கா

### தரம் 4
1. செ.சிந்துஜசர்மா

### தரம் 5
1. இ.வர்சா
2. சு.சந்தோஷ்
3. சு.வான்நிலவன்

### தரம் 6
1. கா.நிதர்சனன்
2. க.தகவினியன்

### தரம் 7
1. சு.சந்தியா
2. மு.கிருசாந்
3. மை.தமிழ்ப்பிரியன்

### தரம் 8
1. இ.ஜஷீனா
1. அ.அகஸ்ரீன்
2. மு.கிருசாந்தி
2. ர.கனுசியன்

### தரம் 9
1. மு.கேதுசா
2. கோ.அஜந்தன்
3. அ.ஷாம்சன் கொறேரா

### தரம் 10
1. சு.றொபேட்வின்சன்
2. ர.கிருசன்
3. இ.அனிற்றன்
3. தெ.அபிஷா

### தரம் 11
1. கா.விதுர்சன்
2. ர.பாவலன்
3. க.காயத்திரி

### தரம் 12
1. அ.அறிவரசன்
2. ச.அஜய்
3. சி.ஜிந்துஜா

### தரம் 13
1. ஞா.குகன்
2. இ.யோஜல் அனோஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நயப்பு

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்நன்றி கொன்ற மகர்க்கு"

எமது பரிசில் நாள் நிகழ்வு சிறப்புற நடைபெற வருகை தந்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இந்நிகழ்வு சிறப்புற அமைய ஒத்துழைத்த ஆசிரியப் பெருந்தகைகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்விசாரா ஊழியர்கள், அனைவருக்கும் உளம் மகிழ்ந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பரிசில் நாள் நிகழ்வுக்கு நிதி ஒத்துழைப்புக்கள் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் உவகையோடு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


எம் அழைப்பை ஏற்று இவ்விழாவுக்கு வருகை தந்த அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் , பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி நயந்து இவ்வறிக்கையினை மகிழ்வோடு நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org